077 9028512

ஆசான்:திரு.ஐ.சிவசங்கரலிங்கம் (சங்கர்)

முல்லைஒளி

ஒளியை நோக்கி

தரம் 4,5

நாட்காட்டி தொடர்பான விளக்கமும் வினாக்களும் பாகம் - 01

மாணவர்கள் நினைவில் கொள்க!

வருடம்

- சாதாரண வருடம் 365 நாட்களைக் கொண்டது.
- நெட்டாண்டு (லீப்வருடம்) 366 நாட்களைக் கொண்டது.
- சாதாரண வருடத்தில் தொடங்கும் நாளும் முடியும் நாளும் ஒன்றாகவே அமையும்.

  உ–ம்:– 2011(365) ஜனவரி–1 சனி டிசெம்பர்–31 சனி
- நெட்டாண்டில் தொடங்கும் நாளிற்கு மறு நாளில் அவ்வாண்டு முடியும்.

  உ–ம்:– 2012(366) ஜனவரி–1 ஞாயிறு டிசெம்பர்–31 திங்கள்
- நெட்டாண்டு நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும்.

  உ–ம்:– 2008, 2012, 2016, 2020, 2024

மாணவர்கள் நினைவில் கொள்க!

மாதம்

- 28 நாட்களைக் கொண்ட மாதம் எனின் தொடக்க நாளுக்கு முதல் நாளில் முடியும்.

  உ–ம்:– 1ம் திகதி வியாழன் எனின் 28ம் திகதி புதன் ஆகும்.
- 29 நாட்களைக் கொண்ட மாதம் எனின் தொடக்க நாளும் முடிவு நாளும் ஒன்றாகும்.

  உ–ம்:– 1ம் திகதி வியாழன் எனின் 29ம் திகதி வியாழன் ஆகும்.
- 30 நாட்களைக் கொண்ட மாதம் எனின் தொடக்க நாளுக்கு மறு நாளில் முடியும்.

  உ–ம்:– 1ம் திகதி வியாழன் எனின் 30ம் திகதி வெள்ளி ஆகும்.
- 31 நாட்களைக் கொண்ட மாதம் எனின் தொடக்க நாளுக்கு மறு நாளுக்கு மறு நாளில் முடியும்.

  உ–ம்:– 1ம் திகதி வியாழன் எனின் 31ம் திகதி சனி ஆகும்.

மாணவர்கள் நினைவில் கொள்க!

மாதம் இடையே

- 28 நாட்களாயின் அதே நாள் வரும்.
  உ–ம்:– பெப்ரவரி 12 புதன் எனின் மார்ச் 12 புதன் ஆகும்.
- 29 நாட்களாயின் அடுத்த நாள் வரும்.
  உ–ம்:– பெப்ரவரி 12 புதன் எனின் மார்ச் 12 வியாழன் ஆகும்.
- 30 நாட்களாயின் ஒரு நாள் கடந்து வரும்.
  உ–ம்:– நவம்பர் 20 புதன் எனின் டிசெம்பர் 20 வெள்ளி ஆகும்.
- 31 நாட்களாயின் இரண்டு நாட்கள் கடந்து வரும்.
  உ–ம்:– ஒக்டோபர் 15 சனி எனின் நவம்பர் 15 செவ்வாய் ஆகும்.



zoom

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

www.lkdu.lk

கவனத்தில் கொள்க!

- ✓ **ஒரு வருடத்தில் உள்ள……..**
  - ➢ நாட்களின் எண்ணிக்கை – 365(சாதாரணம்)
  - ➢ நாட்களின் எண்ணிக்கை – 366(நெட்டாண்டு)
  - ➢ வாரங்களின் எண்ணிக்கை – 52
  - ➢ மாதங்களின் எண்ணிக்கை – 12
- ✓ **ஒரு மாதத்தில் ……**
  - ➢ 28 நாட்கள் – பெப்ரவரி (சாதாரண வருடம்)
  - ➢ 29 நாட்கள் – பெப்ரவர் (நெட்டாண்டு)
  - ➢ 30 நாட்கள் – ஏப்ரல், யூன், செப்ரெம்பர், நவம்பர்
  - ➢ 31 நாட்கள் – ஜனவரி, மார்ச்சு, மே, யூலை, ஆகஸ்ட், ஒக்டோபர், டிசெம்பர்

- ✓ **ஒரு வருடத்திலுள்ள கிழமைகளின் எண்ணிக்கை……..**
  - ➢ சாதாரண வருடத்தில் ஜனவரி 1ம் திகதி வரும் கிழமை மாத்திரம் 53ம் ஏனைய கிழமைகள் 52 வீதமும் வரும்.
  - ➢ நெட்டாண்டு எனில் ஜனவரி 1ம் 2ம் திகதி வரும் கிழமைகள் மாத்திரம் 53ம் ஏனைய கிழமைகள் 52 வீதமும் வரும்?
  - ➢ 29 நாட்கள் கொண்ட ஒரு மாதத்தில் 1ம் திகதி வரும் கிழமைகள் மாதத்தில் ஐந்து தடவைகள் வரும்.
  - ➢ 30 நாட்கள் கொண்ட ஒரு மாதத்தில் 1ம் 2ம் திகதிகள் வரும் கிழமைகள் மாதத்தில் ஐந்து தடவைகள் வரும்.
  - ➢ 31 நாட்கள் கொண்ட ஒரு மாதத்தில் 1ம் 2ம் 3ம் திகதிகள் வரும் கிழமைகள் மாதத்தில் ஐந்து தடவைகள் வரும்.

வினாக்கள் - தொகுதி – 1

1. செப்ரெம்பர் 1ம் திகதி புதன் கிழமை எனின் ஒக்டோபர் முதலாம் திகதி என்ன கிழமை?
2. 2008ம் ஆண்டு பெப்ரவரி 1ம் திகதி செவ்வாய் எனின் மார்ச் 1ம் திகதி என்ன கிழமை?
3. 2013ம் ஆண்டு ஜனவரி மாதம் நடுவில் வரும் தினம் எது?
4. 2011ம் ஆண்டில் நடுவில் வரும் திகதி எது?
5. 2013ம் ஆண்டில் 100வது நாள் எத்தினத்தில் வரும்?

www.lkdu.lk

2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எனின்.

6. இம் மாதத்தில் உள்ள ஞாயிற்றுக் கிழமைகள் எத்தனை?
7. இம் மாதத்தில் உள்ள வெள்ளிக் கிழமைகள் எத்தனை?
8. இம் மாதம் 29ஆம் திகதி என்ன கிழமை?
9. இம் மாதத்தின் இறுதிநாள் என்ன கிழமை?
10. இம் மாதத்தில் வரும் வியாழக்கிழமை திகதிகளின் கூட்டுத்தொகை எத்தனை?

2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம திகதி சனிக்கிழமை எனின்

11. இவ்வருடம் எவ்வகையான வருடம்?
12. இவ்வருடத்தின் இறுதி நாள் என்ன கிழமை?
13. இவ்வருடத்தில் உள்ள சனிக்கிழமைகள் எத்தனை?
14. இவ்வருடத்தில் உள்ள திங்கட்கிழமைகள் எத்தனை?
15. 52 வாரங்களைக் கொண்ட கிழமைகள் எவை?
16. குறித்த ஒரு ஆண்டின் மே 21ம் திகதி சனிக்கிழமை ஆகும். ஆவ்வாண்டின் யூன் 21ம் திகதி என்ன கிழமை ஆகும்?
17. இலங்கை சுதந்திரமடைந்தது எத்தனையாம் நூற்றாண்டு எத்தனையாம் தசாப்தம்?
18. நாளைய மறுதினத்திற்கும் நேற்றைய முன்தினத்திற்கும் இடையே எத்தனை நாட்கள் உண்டு?
19) தை மாதமொன்றில் திங்கட்கிழமைகளாக வரக் கூடிய திகதிகளின் உயர்ந்த பட்ச பெறுமானம் என்ன?
20. சித்திரை மாதமொன்றில் புதன் கிழமைகளாக வரக்கூடிய திகதிகளின் குறைந்த பட்சப் பெறுமானம் என்ன?

வினாக்கள் - தொகுதி - 2

1. 2015ம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை எனில் அம் மாதத்தின் இறுதி நாள் என்ன கிழமையாகும்?

2. புதன்கிழமை ஆரம்பித்த பொருட்காட்சி ஒன்று தொடர்ந்து எட்டு நாட்கள் நடைபெற்றதெனின் பொருட்காட்சி முடிவுற்ற தினம் யாது?

3. பண்ணையொன்றில் தினமும் 30 முட்டைகள் சேகரிக்கப்படும். ஞாயிற்றுக்கிழமை மாலையில் அப் பண்ணையில் 150 முட்டைகள் இருந்தன எனின் எத்தினத்திலிருந்து முட்டைகள் சேகரிக்கப்பட்டிருக்கும்?

4. லீப் வருடம் அல்லாத வருடம் ஒன்றின் முதல் நாள் வியாழக்கிழமை எனின் இவ்வருடத்தின் இறுதி நாள் என்ன கிழமை?

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

www.lkdu.lk

5. தை மாதமொன்றில் திங்கட்கிழமைகளாக வரக்கூடிய திகதிகளின் உயர்ந்தபட்சப் பெறுமானம் யாது?

6. இன்று வெள்ளிக்கிழமை. நேற்று முன்தினத்துக்கும் அடுத்துவரும் திங்கட்கிழமைக்குமிடையில் எத்தனை நாட்கள் உள்ளன?

7. குறித்த வருடம் ஒன்றின் சித்திரை மாதம் 1ம் திகதி வியாழக்கிழமை எனில் அவ் வருடத்தின் வைகாசி மாதம் 1ம் திகதி என்ன கிழமையாகும்?

8. முப்பத்தொரு நாட்களைக்கொண்ட மாதமொன்றின் நடுநாள் எத்தனையாம் திகதியாகும்?

9. பங்குனி மாதம் 1ம் திகதி வியாழக்கிழமை எனின் அம˙ மாதத்தின் நடு நாள் என்ன கிழமையாகும்?

10. ஆனி மாதம் 28ம் திகதி மாலா தனது பிறந்தநாளைக் கொண்டாடினாள். இன்னும் 7 நாட்களில் அவளது தம்பியின் பிறந்தநாள் எனின்இ தம்பியின் பிறந்தநாள் எப்போது?

வினாக்கள் - தொகுதி – 3

கீழே தரப்பட்ட தகவலைக்கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

2016ம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை ஆகும்

1. 2016ம் ஆண்டு தை மாதம˙ 16ம் திகதி என்ன கிழமை ஆகும்?

2. 2016ம் ஆண்டு மாசி மாதம் முதலாம் திகதி என்ன கிழமை ஆகும்?

3. 2016ம் ஆண்டு தை மாதத்தில் புதன்கிழமைகளாக வரும் திகதிகள் எவை?

4. 2016ம் ஆண்டு தை மாதத்தில் எத்தனை புதன் கிழமைகள் உள்ளன?

5. 2016ம் ஆண்டு தை மாதத்தில் வெள˙ளிக்கிழமைகளாக வரும் திகதிகளின் கூட்டுத்தொகை யாது?